# பொருளாதார மறுசீரமைப்புச் சுட்டி

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் | சோஷல் இண்டிகேட்டர்
FRIEDRICH NAUMANN FOUNDATION FOR FREEDOM

நவம்பர் 2022

# அறிமுகம்

நாடளாவிய ரீதியிலான இந்தக் கணக்கெடுப்பு ஆய்வு, தற்போதைய பொருளாதார மற்றும் கடந்த சில மாதங்களாக விவாதிக்கப்பட்டு வருகின்ற பொருளாதார மறுசீரமைப்புக்கள் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயம் தொடர்பில் ஆராய்கின்றது. விக்கிரமசிங்க அரசாங்கமானது, நாடளாவிய ரீதியிலான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலைபெறுதன்மையை மீட்டெடுப்பதற்கும், முன்னெழுந்துள்ள கடுமையான பாதிப்புக்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய வகையில், நடைமுறையில் உள்ள சமூக பாதுகாப்பு அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கும் மற்றும் முன்னொருபோதும் இல்லாத வகையிலான நாட்டின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள, கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புக்களை ஊக்குவிப்பதன் மூலம் வளர்ச்சித் திறனை அதிகரிப்பதற்கும், 48 மாத காலத்திற்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டிற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுகிறது. அந்த வகையில் அரசாங்கமானது, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து தேவையான உதவியைப் பெற உதவும் வகையிலான பல்வேறு வகையான சிக்கன நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க திட்டமிட்டுள்ளது. இருப்பினும், முறையான பொறுப்புக்கூறல் அற்ற, அர்த்தமுள்ள விமர்சனத்திற்கு உட்படுத்தப்படாத திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அது குடிமக்களுக்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். இருப்பினும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலின் படி குறைந்த வருமானம் உடைய குடும்பங்களை இலக்கு வைத்து நலன்புரித்திட்டங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. ஆனாலும், அதன் விளைவாக இலங்கையர்களின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கும், மிகவும் மோசமான பொருளாதார துன்பங்களுக்கும் சாதகமான மற்றும் போதுமான அளவிலான தீர்வு கிடைக்கின்றதா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு ஆய்வானது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் நடாத்தப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரானது, 1999ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பரந்த அளவிலான சமூக - அரசியல் பிரச்சினைகள் குறித்து அபிப்பிராய ஆய்வுகளை நடாத்தி வருகிறது. கலாநிதி பிரதீப் பீரிஸ், எம். கிருஷ்ணமூர்த்தி, முதிதா பத்திரன, இஷாரா ஜயரத்ன மற்றும் அஸ்ரா பாயிஸ் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினால் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வை நடாத்த ஆதரவளித்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து (CPA) மற்றும் திரு. Wolfgang Heinze மற்றும் Friedrich Naumann Foundation for Freedom (FNF) குழுவினர் ஆகியோருக்கு சோஷல் இன்டிகேட்டர் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

# முறைமையியல்

இந்தப் பொருளாதார மறுசீரமைப்புச் சுட்டி ஆய்வானது, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) 1000 பதிலளிப்பவர்களைக் கொண்ட மாதிரியுடன் மேற்கொள்ளப்பட்டது. மாதிரியானது நாட்டின் 25 மாவட்டங்களிலும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. இந்த ஆய்வில் 73 வெளிக்கள ஆய்வாளர்கள் (ஆண் மற்றும் பெண் இருபாலரும்) பங்குபற்றினர். பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டது. மேலும் பதிலளிப்பவர்கள் எழுமாற்று மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெளிக்கள ஆய்வானது 2022 ஒக்டோபர் 21ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. சனத்தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பானது மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# ஆய்வு முடிவுகள்

## ஒரு வருடத்திற்கு முன்னரான பொருளாதார நிலைமையுடன் ஒப்பிடுகை

- இலங்கையர்களில் பெரும்பான்மையானவர்கள் (79%) தங்களது பொருளாதார நிலைமை ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்தானது வேறுபட்ட தொழில் துறைகளைச் சேர்ந்த இலங்கையர்கள் மத்தியில் காணப்படுகின்றது. குறிப்பாக சுயதொழில் செய்பவர்கள் (90%) மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் (83%) பொருளாதாரச் சுமையை ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் சற்று அதிகமாகவே உணர்கிறார்கள்.

## சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பற்றிய அபிப்பிராயம்

- அரசாங்கமானது நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை பெரும்பான்மையான இலங்கையர்கள் (61%) அனுமதிக்கின்றனர்.

- இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின் மூலம் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவர இயலும் என முக்கால்வாசி இலங்கையர்கள் (75%) நம்புகின்றனர். குறிப்பிடத்தக்க வகையில் இலங்கையர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் இந்த அணுகுமுறை குறித்து அதிகளவான நம்பிக்கையைத் தெரிவிக்கின்றனர்.

## ஐ.நா. தீர்மானம் தொடர்பில் அறிந்துள்ளமை மற்றும் அபிப்பிராயம்

- இலங்கை மீது 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானம் குறித்து தாங்கள் அறிந்துள்ளதாக கிட்டத்தட்ட அரைவாசி இலங்கையர்கள் (46%) தெரிவித்துள்ளனர்.

- அவர்களில் பெரும்பான்மையானவர்கள் (76%) தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் அவதானம் செலுத்தவும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவும் இலங்கை அரசாங்கத்தை இந்த ஐ.நா. தீர்மானம் கோருகின்றது என்பது குறித்து தாங்கள் அறிந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

## முன்மொழியப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி திருத்த மசோதா தொடர்பில் அறிந்துள்ளமை மற்றும் அபிப்பிராயம்

- ஆய்வு முடிவுகளின்படி, அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டமூலம் பற்றி இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் (54%) அறிந்துள்ளனர். அறிந்துள்ளதாக தெரிவித்தவர்களில் (64%) அதை அனுமதிக்கவில்லை.

## பொருளாதார மறுசீரமைப்புகள் தொடர்பில் பணியாற்றுகின்ற முக்கிய நபர்கள் மீதான நம்பிக்கை

- தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க சரியான தீர்மானங்களை எடுப்பார் என பெரும்பான்மையான இலங்கையர்கள் (57%) நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.
- இந்த விடயம் தொடர்பில் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இரண்டாவது நம்பிக்கைக்குரியவராவார் (45%). அத்துடன், அரசாங்க பொது நிதிக் குழுவின் (COPF) தலைவரான கலாநிதி ஹர்ஷ டி சில்வா மூன்றாவது நம்பிக்கைக்குரியவராவார் (43%).
- அரசாங்க பொது முயற்சிகள் குழுவின் (COPE) தலைவரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார மீது இலங்கையர்களில் கால் பகுதியினர் (25%) நம்பிக்கை வைத்துள்ளனர்.
- தேசிய பேரவையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான உபகுழுவின் தலைவராக பாட்டலி சம்பிக்க ரணவக்க மீது (23%) நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## பொருளாதார நெருக்கடிக்கான சர்வதேச உதவி

- பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவர இலங்கைக்கு உதவும் நாடு என இலங்கை மக்களில் அதிகமானவர்கள் ஆசிய நாடுகளை முதல் தரவரிசைப்படுத்துகின்றனர்.
- பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீனா இலங்கைக்கு உதவும் என்று பெரும்பான்மையான இலங்கையர்கள் (37%) நம்புகின்றனர், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இந்தியா இலங்கைக்கு உதவும் என்று 24%, ஜப்பான் உதவும் என்று 14% நம்புகின்றனர்.
- 10% இற்கும் குறைவான இலங்கையர்கள் அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு உதவும் என்று நினைக்கிறார்கள்.

## இலங்கையர்கள் முகம்கொடுக்கும் பொருளாதார சிரமங்கள்

- இலங்கையர்கள் முகம்கொடுக்கும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்வதாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. பொருளாதார நெருக்கடியின் விளைவாக, தமது உணவின் தரத்தை மாற்றி/ வாங்கி பழக்கப்பட்ட பொருட்களை தவிர்த்து வேறு பொருட்களை வாங்குவதாக 82% தெரிவிக்கின்றனர். மேலும், 66% மருந்து மற்றும் வைத்திய சேவையை பெற்றுக்கொள்வதில் பொருளாதார சிரமங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும், 37% தமது பிள்ளைகளின் கல்விக்கான செலவை குறைத்துள்ளதாகவும், மூன்றில் ஒரு பகுதியினர் (35%) நாளொன்றுக்கு உட்கொள்ளும் உணவின் அளவை அல்லது உணவு உட்கொள்ளும் தடவைகளை குறைத்துள்ளதாகவும் மற்றும் சுமார் 31% தாங்கள் அல்லது தமது வீட்டில் எவரேனும் தொழிலை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்

## நாட்டை விட்டு வெளியேறுவதற்கான விருப்பம்

- வேறு நாட்டிற்கு புலம்பெயர தங்களுக்கு வாய்ப்பு கிடைக்குமாயின் அது குறித்து 60% இற்கும் அதிகமான இலங்கையர்கள் கவனத்தில் கொள்ளத்தயார் என்று குறிப்பிடுகின்றனர். இதில் பெரும்பான்மையானவர்கள் இளம்வயதினரே. புலம்பெயர்ந்து செல்வதில் அதிக ஆர்வம் காட்டுவது

பெரும்பாலும் சிங்கள இளைஞர்களே என்று ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. எந்த நாட்டிற்கு புலம்பெயர விரும்புகின்றீர்கள் என்று கேட்ட போது பெரும்பான்மையானவர்கள் கிழக்கு ஆசிய நாடுகளை குறிப்பாக ஜப்பான் மற்றும் தென் கொரியாவை விரும்புகின்றார்கள். இரண்டாவது அதிக விருப்பமான இடமாக ஐரோப்பிய நாடுகளை குறிப்பிடுகின்றார்கள்

## தாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் மீதான அணுகுமுறை

- அரைவாசிக்கும் மேற்பட்ட (56%) இலங்கையர்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் எமது நாட்டில் முதலீடு செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று நினைப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. கிட்டத்தட்ட 65% தனிநபர் வருமானம் ஈட்டும் திறனை அரசாங்கம் கட்டுப்படுத்த கூடாது எனவும், 34% வியாபாரங்களை நடத்துவது அரசின் பொறுப்பு அல்ல என்பதால் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துதல் வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர்.

## நலன்புரிக் கொள்கைகள் தொடர்பான பொதுமக்களின் அபிப்பிராயம்

- நலன்புரிக் கொள்கைகள் தொடர்பில் மக்கள் வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். பெரும்பான்மையானவர்கள் அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைப்பதை ஆதரித்த போதிலும் நலன்புரித்திட்டங்களுக்கு செலவு செய்து மக்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.
- ஒவ்வொரு குடிமகனுக்கும் தொழில் இருப்பதை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பா இல்லையா என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.
- அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைத்தல் மற்றும் தமது குடிமக்களுக்கு உதவிகளை வழங்கும் நலன்புரித்திட்டங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்றல் எனும் முன்மொழிவுகள் தொடர்பில் இளைஞர் யுவதிகள் மற்றும் பெரியவர்கள் (30 வயதுக்கு மேற்பட்டவர்கள்) ஒரே விதமான அபிப்பிராயங்களை வெளிப்படுத்துகின்றனர்.
- ஆனாலும், வேலை ஒன்றைத் தேடிக்கொள்வது தனிநபரின் பொறுப்பே அன்றி அரசாங்கத்தின் பொறுப்பு அல்ல எனும் கருத்திற்கு இளைஞர் யுவதிகள் இடையே அதிக ஆதரவு உள்ளது.

## எதிர்காலப் பொருளாதார நிலை பற்றிய நம்பிக்கை/ அவநம்பிக்கை

- ஆய்வு முடிவுகளின் படி, 41% இலங்கையர்கள் எதிர்கால பொருளாதாரம் தொடர்பில் நம்பிக்கை இன்மையை வெளிப்படுத்துகின்றனர். ஒப்பீட்டளவில் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் தனியார் துறைகளில் தொழில் செய்பவர்கள் எதிர்கால பொருளாதாரம் குறித்து அதிகமான நம்பிக்கை இன்மையை வெளிப்படுத்துகின்றனர். 18% மட்டுமே இன்னும் ஒரு வருடத்தில் இலங்கையின் பொருளாதாரத்தின் நிலைமை மேம்படும் என நம்புகின்றனர்.

FRIEDRICH NAUMANN FOUNDATION ஜெர்மனியில் 1958ஆம் ஆண்டு ஜெர்மனி குடியரசின் முதல் ஜனாதிபதி தியோடர் ஹியூஸால் நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளையானது ஜெர்மனியிலும் வெளிநாட்டிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் மற்றும் சமூகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சுதந்திரம் என்ற கொள்கையை செல்லுபடியாக்கும் இலக்கை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எங்கள் பணிக்கு ஜேர்மன் பாராளுமன்றம் மத்திய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைச்சகம், வெளியுறவு அலுவலகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மூலம் நிதியளிக்கிறது. சுதந்திரத்திற்கானஃ ப்ரீட்ரிக் நௌமன் அறக்கட்டளை உலகம் முழுவதும் 60 நாடுகளில் செயல்படுகிறது. தெற்காசியாவில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் FNF அலுவலகங்கள் உள்ளன. கூடுதலாக FNF நேபாளம், பூட்டான் மற்றும் மாலைத்தீவில் உள்ள பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுகிறது. இலங்கையுடனான சுதந்திரத்திற்கான எமது அறக்கட்டளை தொடர்பு ஐந்து தசாப்தங்கள் பழமையானது. 1968 முதல் 2013 வரையிலான காலகட்டத்தில் மற்றும் 2016 இல் அதன் பணியை மீண்டும் தொடங்கும் போது, அறக்கட்டளையின் பணி சுதந்திரம் மற்றும் பொறுப்பின் முக்கிய மதிப்புகளில் கவனம் செலுத்துகிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05 இலங்கை
தொலைபேசி: +94 11 208 1384 - 6
இணையதளம்: http://www.cpalanka.org

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05 இலங்கை
தொலைபேசி: +94 11 282 6010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: krishna@cpasocialindicator.org